இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 353 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 17 – புதன்கிழமை 02 ஆகஸ்ட் 2023 – கோவை ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 353 : Thiruvalluvar Year - 2054 - Aadi 17 - Wednesday 02 August 2023 - Kovai ★★ 8 Pages ₹ 5.00


## தாய்த் தமிழ்நாட்டை பெருமை அடைய வைப்பது கல்விதான்! மாணவச் செல்வங்களே – நன்றாகப் படித்து

# சாதிக்க முடியாததையெல்லாம் சாதித்து சாதனையாக்குங்கள்!





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (31.7.2023) தலைமைச் செயலகத்தில், ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் தலைவர் யங் லியு (Mr.Young Liu) அவர்கள் சந்தித்து தமிழ்நாட்டில் ஃபாக்ஸ்கான் நிறுவனம் மேற்கொண்டு வரும் புதிய முதலீடுகள் குறித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் வே.விஷ்ணு, ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் Chief Stratgegy Officer (Semiconductor) டாக்டர் சைய் சியாங் (Dr. SY Chiang), பொது மேலாளர் (குறைகடத்தி) டாக்டர் பாப் சென் (Dr. Bob Chen), தலைமை அலுவலக இயக்குநர் செந்தில் குமார், இந்திய பிரதிநிதி வி. லீ (Mr. V. Lee), இணை மேலாளர் ஹன்னா வேங் (Ms. Hannah Wang) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கொளத்தூர், அருள்மிகு கபாலீசுவரர் கலை – அறிவியல் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஆக. 2 -**

**கொளத்தூரில் கபாலீசுவரர் கலை - அறிவியல் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றுகையில், "தாய்த் தமிழ் நாட்டை பெருமை அடைய வைப்பது கல்விதான் என்றும் மாணவச் செல்வங்களே - நன்றாகப் படித்து சாதிக்க முடியாததை யெல்லாம் சாதித்து சாதனையாக்குங்கள்" என்று குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.7.2023) சென்னை, கொளத்தூர், அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு தொடக்க விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு :-

எவ்வளவு பணி இருந்தாலும், கொளத்தூர் தொகுதிக்கு வந்து, உங்கள் முகத்தையெல்லாம் பார்த்தால்தான், எனக்குப் புது எனர்ஜியே ஏற்படுகிறது. தமிழ்நாட்டிற்கே நான் முதலமைச்சர். ஆனால், உங்களுக்கு நான் சட்டமன்ற உறுப்பினர். உங்களுடைய அன்பால்தான், உங்களுடைய பேரன்பால்தான், உங்களுடைய வாழ்த்துகளோடுதான் நான் ஹாட்ரிக் வெற்றி பெற்றேன். மூன்றுமுறை தொடர்ந்து எம்.எல்.ஏவாக என்னை இந்த தொகுதியில் நீங்கள் தேர்ந்தெடுத்தீர்கள். நீங்கள் எல்லாம் என்னை எம்.எல்.ஏவாக தேர்ந்தெடுத்த காரணத்தால்தான் இன்றைக்கு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கிறேன். அதனால், நீங்கள் உரிமையோடு கேட்பதை நிறைவேற்றுகின்ற பொறுப்பு எனக்கு உண்டு. கூடுதல் பொறுப்பு உண்டு.

**தொடங்கிய இரண்டாண்டில் கல்லூரியின் மிகப் பெரிய வெற்றி!**

இந்த அருள்மிகு கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை, கடந்த 2.11.2021 அன்று நான் தொடங்கி வைத்தேன். இது தொடங்கிய இரண்டே ஆண்டுகளில், 685 மாணவ -மாணவிகள் இந்தக் கல்லூரியில் சேர்ந்து படிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இதுவே, இந்தக் கல்லூரி எவ்வளவு நன்றாக செயல்படுகிறது என்று புரிந்து கொள்ளலாம். நன்றாக சொல்லி தருவதால்தான், பெற்றோர்களும் தேடி வந்து, உங்களை இங்கே சேர்த்திருக்கிறார்கள். முதல் வருடம் 240 பேர் சேர்ந்தார்கள். அடுத்த வருடம் மாணவர்களுடைய எண்ணிக்கை 480 ஆனது. இப்போது 685. ஆனால், அட்மிஷன் கேட்டு வருகின்ற விண்ணப்பங்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறது. இதுதான் இந்தக் கல்லூரியுடைய வெற்றி. மிகப் பெரிய வெற்றி. இந்த வெற்றியில் பெரும்பங்கு யாருக்கு என்று கேட்டீர்கள் என்றால், நம்முடைய அமைச்சர் சேகர் பாபு அவர்களுக்கு தான்.

ஏனென்றால், கடந்த 2021ஆம் ஆண்டு, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 10 கல்லூரிகள் திறக்கப்படும் என்று அறிவித்து, அதில் ஒன்றாக இந்தக் கல்லூரி அமைவதற்கு காரணமாக இருந்தவர் நம்முடைய சேகர்பாபு அவர்கள். இப்படி ஒவ்வொரு காரியத்தையும், பார்த்து பார்த்து செய்கின்ற காரணத்தால்தான் அதுவும் பார்த்து, பார்த்து வெற்றியடையக்கூடிய அளவுக்கு செய்கின்ற காரணத்தினால் தான், அவரை நான் எப்போதும் சேகர் பாபு என்று சொல்லாமல் செயல்பாபு என்று சொல்வதுண்டு.

**ஒவ்வொரு கட்டமாக பார்த்துப் பார்த்து திட்டங்கள் தீட்டி உதவி செய்து கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு நீங்கள் எல்லோரும் நன்றாக படிக்க வேண்டும். இன்னும் சில ஆண்டுகள் கடந்து, எங்கேயாவது ஒரு இடத்தில், ஏதாவது ஒரு சூழ்நிலையில், ஏதாவது ஒரு தருணத்தில் என்னை நீங்கள் சந்திக்கும்போது, "உயரமான பதவிகளில் இருக்கிறோம். இவ்வளவு பெரிய ஆளாகிவிட்டோம்" என்று பெருமையோடு சொல்லும் அளவுக்கு அந்தச் சூழ்நிலை ஏற்பட்டால் அதைவிட மகிழ்ச்சி வேறு எதுவும் எனக்கு இருக்க முடியாது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.**

**கல்வியே கடவுள் என்று தன் பணியை சிறப்பாகச் செய்யும் சேகர்பாபு!**

அவர் மிகுந்த கடவுள் நம்பிக்கை கொண்டவர். ஃபோன் எடுத்து ரிங் டோன் கேட்டாலே தெரியும். ஐயப்பன் பாட்டுதான் வரும். அதனால், கல்விக்கான கடவுளையும் வணங்குகிறவர். கல்வியே கடவுள் என்று தன்னோட பணியை சிறப்பாக செய்து கொண்டு இருக்கிறார்.

அறநிலையத்துறை மூலம், இன்னும் பல அறம் நிறைந்த செயல்களை அவர் செய்யவேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன். அவருக்கும், இந்தக் கல்லூரி நிர்வாகத்திற்கும், உதவிப் பேராசிரியர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகளை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே கடந்த இரண்டு ஆண்டுகளாக, இந்தக் கல்லூரியில் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கு கல்விக் கட்டணமும் கல்வி உபகரணங்களோடு கூடிய புத்தகப்பையும் நான் வழங்கினேன்.

இன்றைக்கு புதிதாக சேர்ந்திருக்கின்ற பேட்ச் வந்திருக்கிறீர்கள். அந்த மாணவர்களுக்கும் வழங்குகிறேன். இப்படி வாய்ப்பு கிடைக்கும்போ தெல்லாம், மாணவர்களான உங்களை சந்திப்பதும் – உங்களிடம் பேசுவதும், அது தான் என்னை எப்போதும் ஆக்டிவ்வாக வைத்துக் கொள்கிறது. அதுதான் உண்மை. நான் சொன்னேன். வயது 70. ஆனால், 20 வயது போல இப்போது நிற்கிறேன். அதற்கு காரணம் நீங்கள்தான். நீங்களும் படிப்பில் ஆக்டிவ்வாக இருக்கிறீர்கள், இருக்கவேண்டும். இதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**கல்விதான் தலைமுறை முன்னேற்றத்திற்கு அச்சாரமாக அமைந்திருக்கிறது!**

இந்த படிப்பு நமக்கு சுலபமாக கிடைத்துவிடவில்லை. எத்தனையோ போராட்டத்திற்குப் பிறகு நமக்கு இந்தப் படிப்பு கிடைத்தி ருக்கிறது. இந்தக் கல்விதான் நாம் மட்டுமில்லை, நம்முடைய தலைமுறையே முன்னேறுவதற்கான இது அச்சாரமாக அமைந்திருக்கிறது. அதனால்தான், நீங்கள் நன்றாக படிக்க வேண்டுமென்று நம்முடைய திராவிட மாடல் அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதிலும், குறிப்பாக, பெண்கள் கல்வி கற்க எந்தத் தடையும் இருக்கக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறோம்.

பசியில் வாடாமல் இருப்பதற்குதான், காலையில் பள்ளிக்கு வந்தவுடன், காலை உணவுத் திட்டம். மாணவிகள், பள்ளிகளுக்கு கல்லூரிகளுக்கு வேலைகளுக்குச் செல்ல, நகரப் பேருந்துகளில் இலவசப் பயணம். உங்களில் பல பேர் இந்தப் பயணத்தால், மாதம் கொஞ்சம் பணத்தை மிச்சப்படுத்தி, அதை கல்விச் செலவுகளுக்குப் பயன்படுத்தி இருப்பீர்கள் என்று நான் மனதார நம்புகிறேன்.

**மாணவ - மாணவியர் முன்னேற நான் முதல்வன் - புதுமைப் பெண் திட்டம்!**

படிக்கும்போது பாடத்திட்டத்தை தாண்டி,

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# தமிழ்நாடு ஆளுநரின் அன்றாடப் புலம்பல்கள்!

## நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை!

*சென்னை, ஆக. 2 -*

"எந்த அவதாரம் போட்டு வந்தாலும் ஆரிய மாயையை அடையாளம் காணும் பேரறிஞர் அண்ணாவின் தம்பிகள் முத்தமிழறிஞர் கலைஞரின் உடன்பிறப்புகள் நாங்கள்" என்றும், "ஆளுநர் ஆர்.என். ரவியின் அன்றாடப் புலம்பல்கள் பற்றி எங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை!" என்றும் குறிப்பிட்டு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவரது அறிக்கை வருமாறு:



தமிழ்நாடு சட்டமன்றத்தால் நிறைவேற்றி அனுப்பப்படும் சட்ட மசோதாக்களுக்கு ஒழுங்காக ஒப்புதல் அளிப்பது நீங்கலாக, அனைத்துச் செயல்களையும் ஒழுங்காகச் செய்து கொண்டிருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். திருக்குறள் மொழிபெயர்ப்பு சரியாக இருக்கிறதா, வள்ளலார் பாட்டு முறையாக இருக்கிறதா என்பதைப் பார்ப்பது முதல், சனாதனம் குறித்த தனது ஆய்வை தினமும் செய்துகொண்டு வருகிறார்.

**புலம்பல்**

'திராவிடம்' என்ற சொல்லைக் கேட்டாலே அவருக்கு எரிகிறது. திராவிடத்துக்கு எதிரான தனது வன்மம் நிறைந்த வார்த்தைப் போரைத் தொடர்ந்து நடத்தி வருகிறார். பா.ஜ.க.வின் முந்தைய தலைவர்களில் ஒருவரான தீனதயாள் உபாத்தியாயாவின் நூலை வெளியிட்டு நேற்றைய தினம் பேசிய ஆளுநர் ஆர். என்.ரவி, அங்கும் சென்று 'திராவிடம் பற்றிய பேச்சு பிரிவினையைப் பிரதி பலிக்கும் வகையில் உள்ளது' என்று பேசி இருக்கிறார். இப்படிச் சொல்லும் அவர், எந்த வகையில் பிரிவினையைப் பிரதிபலிக்கிறது என்று சொல்லி இருந்தால் விரிவாக விளக்கம் அளிக்கலாம். பொத்தாம் பொதுவாக, பிரிவினையை பிரதிபலிக்கிறது என்று அவர் சொல்வதைப் புலம்பலாக மட்டுமே எடுத்துக் கொள்ள முடியும்.

தொடர்ச்சி 5 ஆம் பக்கம்

## மணிப்பூர் விவகாரத்துக்கு நாடாளுமன்றத்தில் பிரதமர்

# மோடி பதிலளிக்காமல் தவிர்ப்பது கேலிக்கூத்தானது!

## காங்கிரஸ் மூத்த தலைவர் மணீஷ் திவாரி எம்.பி. பேட்டி!

புதுடெல்லி, ஆக. 2–

நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அனைத்து மசோதாக்களையும் நிறைவேற்றுவது அரசியலமைப்பு ரீதியாக சந்தேகத்தை எழுப்புவதாக காங்கிரஸ் கட்சி கூறியுள்ளது. மணிப்பூர் விவகாரத்தில் பிரதமர் மோடி பதிலளிக்காவிடில் அது கேலிக் கூத்தாகும் என்று அக்கட்சி குறிப்பிட்டுள்ளது. மணிப்பூர் விவகாரத்தை முன்வைத்து நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கடுமையாக போராடி வருகின்றன. இந்த பிரச்சினையில் எதிர்க்கட்சிகள் சார்பில் மக்களவையில் காங்கிரஸ் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் தாக்கல் செய்துள்ளது.

இதை ஏற்ற சபாநாயகர் விவாதத்துக்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும் என கூறியுள்ளார். அதற்கான விவாதம் இதுவரை நடக்காத நிலையில், நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் வேறு சில மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இந்த விவகாரத்தில் ஒன்றிய அரசு மீது காங்கிரஸ் கட்சி சந்தேகம் எழுப்பியுள்ளது.

மணிஷ் திவாரி எம்.பி. இது தொடர்பாக கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், எம்.பி.யுமான மணிஷ் திவாரி, பி.டி.ஐ. செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள சிறப்பு பேட்டியில் கூறியிருப்பதாவது:

மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்தை திட்டமிடுவதற்கான 10 நாள் கால அவகாசத்தை மசோதாக்களை நிறைவேற்ற பயன்படுத்த முடியாது. நம்பிக்கையில்லா தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு நடந்துள்ள அனைத்து சட்டப்பூர்வ நடவடிக்கைகளும் அரசியலமைப்பு ரீதியாக சந்தேகத்திற்குரியவை. ஆய்வு செய்ய வேண்டும் எனவே நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு மக்களவை அல்லது மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்ட அனைத்து மசோதாக்களின் சட்டப்பூர்வ தன்மையும், அவை சட்டப்பூர்வமாக நிறைவேற்றப்பட்டதா? இல்லையா? என்பதையும் நீதிமன்றத்தால் ஆய்வு செய்ய வேண்டும்.

மணிப்பூரில் நடந்ததும், அங்கு தொடர்ந்து நடப்பதும் முற்றிலும் கண்டிக்கத்தக்கது. மாநிலத்தில் பா.ஜனதா அரசு உள்ளது, மத்தியில் பா.ஜனதா அரசு உள்ளது. எனவே, யாராவது இதற்கு பொறுப்பேற்க வேண்டும். மணிப்பூரின் மிகவும் மோசமான சூழல் தொடர்பாக விவாதம் நடத்தப்பட்டு பிரதமர் மோடி அறிக்கை அளிப்பார் என எதிர்பார்த்தோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, நாடாளுமன்ற தொடர் தொடங்குவதற்கு முன், பிரதமர் மிகவும் கவலைப்படுத்தப்பட்ட கருத்தை வெளியிட்டார். அதன் பிறகு, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பலமுறை அளிக்கப்பட்ட ஒத்திவைப்பு தீர்மானங்களை அவைத்தலைவர்கள் ஏற்கவில்லை.


வேறு வழி இல்லை எனவே எந்த ஒரு அரசுக்கும் முக்கியமாக இருக்க வேண்டிய பொதுவாழ்வின் ஒழுக்கம், நன்னடத்தை மற்றும் பொறுப்புக்கூறல் என்ற கோட்பாட்டை அமல்படுத்துவதற்காக நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வருவதைத்தவிர எதிர்க்கட்சி கூட்டணிக்கு வேறு வழி இல்லை.

எனவே இந்த சூழ்நிலையில், மணிப்பூர் விவகாரத்துக்கு பதில் அளிக்காமல் இருக்க பிரதமர் முடிவு செய்தால், அது கேலிக்கூத்தாக இருக்கும் என்று மணிஷ் திவாரி தெரிவித்தார்.

## தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (3)!

## ஆகஸ்ட் 3 - அன்று வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று "முரசொலி சிறப்பிதழ்" வெளிவரும் என்று முன்பே அறிவிக்கப்பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, ஆகஸ்ட் 3 அன்று முரசொலி சிறப்பிதழ், "பத்திரிகையாளர் - ஊடகவியலாளர் பார்வையில் கலைஞர்" என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**— ஆசிரியர்.**